Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. : CC.59/2017

Witness for Prosecution : PW8

| | | | |
|---|---|---|---|
| Name | : கணபதி | Taluk | : |
| Father's / Husband Name | : சக்கரவர்த்தி | Calling | : |
| Village | : பண்ணந்தூர் | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 30.07.2025.

Accused present.

துவக்க நேரம்– 01.37 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

1. நான் தற்போது பெங்களூரில் வேலை செய்து வருகிறேன். சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் பண்ணந்தூர் இந்தியன் வங்கி அருகே கூட்டமாக இருந்தது. நான் அங்கு சென்று பார்த்தபோது போலீசார் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்தை என்னிடம் வாங்கினார்கள். மேற்படி கையெழுத்தை போலீசார் எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. **பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வங்கிக்கு எதிராக விபத்து நடந்ததாக போலீசார் தகவல் சொன்னார்கள். போலீசார் விபத்து நடந்தது என்று சம்பவ இடத்திற்கு வந்து என்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள் என்றால் இல்லை. என் முன்பாக போலீசார்

வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் இல்லை. என் முன்பாக போலீசார் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் முதல் விசாரணை :**

இல்லை

முடிவு நேரம் 01.43 PM.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/- Saravanan B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)

Judicial Form No.53
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

Case No. : CC.59/2017
Witness for Prosecution : PW9
Name : கிருஷ்ணன் Taluk :
Father's / Husband Name : பெருமாள் Calling :
Village : Age :

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 30.07.2025.

Accused present.

துவக்க நேரம்– 01.44 PM

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

1. நான் தற்போது நாகரசம்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.04.2017 ம் தேதி பாரூர் காவல் நிலைத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது பாரூர் காவல் நிலைய குற்ற எண்.56/2017 இதச பிரிவுகள் 279, 304(A) வழக்கில் இறந்துபோன சின்னபையன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக பாரூர் காவல் ஆய்வாளர் உத்தரவின் பேரில் வேண்டுகோள் கடிதம் பெற்று சேலம் அரசு மருத்துவமனையில் மருத்துவரை சந்திந்து வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனையின் போது உடன் இருந்து பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவரது குலவழக்கப்படி அடக்கம்செய்ய அவரது மகன் குப்புராஜ் என்பவரிடம் பிரேதம் ஒப்படைத்து நிலையம் வந்ததை காவல் ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் முதல் விசாரணை :**

இல்லை

முடிவு நேரம் 01.43 PM.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/- Saravanan B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)